**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 600 006**

**இடைநிலை/மேல்நிலை இரண்டாமாண்டு துணைத் தேர்வு, செப்டம்பர்/அக்டோபர் 2018**

**அசல் மதிப்பெண் சான்றிதழ் மற்றும்**

**ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் வழங்குதல்**

**குறித்த செய்திக்குறிப்பு**

நடைபெற்ற செப்டம்பர்/அக்டோபர் 2018 மேல்நிலை இரண்டாமாண்டு துணைத் தேர்வு எழுதிய தேர்வர்களுக்கு **31.10.2018–**லிருந்தும், இடைநிலை துணைத் தேர்வு எழுதிய தேர்வர்களுக்கு **25.10.2018–**லிருந்தும் தற்காலிக மதிப்பெண் சான்றிதழை (Provisional Certificate) தேர்வர்கள் தாங்களே ஆன்–லைன் மூலம் பதிவிறக்கம் செய்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.

தற்போது, செப்டம்பர்/அக்டோபர் 2018 மேல்நிலைத் தேர்வெழுதிய (மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு உட்பட) தேர்வர்களும் மற்றும் இடைநிலைத் தேர்வெழுதிய (மறுகூட்டல் உட்பட) தேர்வர்களும் தங்களது அசல் மதிப்பெண் சான்றிதழ்களை **24.12.2018** (திங்கட்கிழமை) முதல், அவர்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்களிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

நிரந்தர பதிவெண் (Permanent Register Number) கொண்ட தேர்வர்கள், இதற்கு முந்தைய பருவங்களில் அவர்கள் தேர்ச்சி பெறாத பாடங்களை செப்டம்பர்/அக்டோபர் 2018 துணைத் தேர்வில் தேர்வெழுதி, அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருப்பின், அவர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட அசல் மதிப்பெண் சான்றிதழ்களும், முழுமையாக தேர்ச்சி பெறாதவர்களுக்கு அவர்கள் தேர்வெழுதிய பாடங்களுக்கான மதிப்பெண் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**ஒம்/–**

**இயக்குநர்**

**தேதி:** 20.12.2018.

**இடம்:** சென்னை– 600 006.